1972 சனவரி 29]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, தக்காளிச் சாறு அதிகமாகத் தங்கியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் மதிப்பீடு என்ன? அவைகள் விற்பனை செய்வதில் காலதாமதமானால் நஷ்டம் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் தேங்கியிருக்கிறது என்று சொல்லவில்லை. தக்காளிச் சாறை வெளிநாட்டினர் விரும்பி வாங்குவதற்குத் தயாராக இல்லை என்றுதான் சொன்னேன்.

வங்கிகளின் குழுக்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள்.

* 152 *வினா.—திரு. ந. சோமசுந்தரம் :* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கூட்டுறவுத் துறையில் வங்கிகளுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுப் பதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு (Reserved) தனி இடம் ஒதுக்கு வதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாநில நிலவள வங்கி யின் இயக்குநர் குழுவிலும், 16 மத்திய வங்கியின் இயக்குநர் குழு விலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்வதற் கான விதிகள் இப்போது அமலில் இருக்கின்றன.

Transport of stags from Guindy

* 153 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether a number of stags have been transported from the Children's Park, Guindy, Madras to Javadi Hills near Vellore ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) ஆறு ஆண் புள்ளி மான்களும், மூன்று பெண் புள்ளி மான்களும், சென்னை கிண்டியிலுள்ள மான்கள் பூங்காவிலிருந்து வேலூர் வனக் கோட்டத்திலுள்ள சந்தவாசல் சரகத்தைச் சேர்ந்த அமர்தி ஒதுக்கக் காடுகளில் விடுவதற்காக, சென்ற ஆகஸ்டு மாதம் அனுப்பப்பட்டன.

Hunting in forests of Tamil Nadu

* 154 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether hunting is allowed in the forests of this State; and

(*b*) if so, the details thereof?